மாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு? அதனுடைய தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–94 மற்றும் 1994–95–ஆம் ஆண்டுகளில் சங்கங்களுக்குத் தக்க அறிவிப்புச் செய்து, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுடைய சான்றிதழ் அடிப்படையில் நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் மொத்தம் 42 விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. கடன் வழங்குவதற்கான அறிவிப்பு செய்தவுடன் அவர்களுக்கு உடனடியாக கறவை மாடுகள் வாங்குவதற்கு மான்யம் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

17--

மீனவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை

*10201--திரு. ஆர். கோடிமாரி:

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழக கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் போது தமிழக எல்லையிலேயே இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை தனியே சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பொதுவாக இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கும்போது, காற்றின் திசை மாற்றத்தினால் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற் பகுதிக்குள் தவறிச் செல்ல நேரிடுகிறது. இதனால் இலங்கைக் கடற்படையினராலும், சில இலங்கை தீவிரவாத அமைப்புகளைச் சார்ந்தவர்களாலும் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். இந்திய

மீனவர்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே இந்திய மீனவர்கள் இந்திய கடல் எல்லையைத் தாண்டாமல் இருப்பதற்கு அவர்களுக்கு அவ்வபோது செய்தித்தாள்கள் வாயிலாகவும், கூட்டங்கள் நடத்தியும் தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. மைய அரசின் அறிவரையின் பேரில், கடற்கரையோர மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்ல வேண்டாமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களைத் தாக்குவதைத் தடுக்கக் கோரி, தமிழக அரசு மைய அரசைத் தொடர்ந்து பலமுறை கேட்டுக் கொண்டுள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் மாறுதல் செய்து, இந்திய மீனவர்கள் இந்திய கடல் எல்லையைத் தாண்டி இலங்கை நீர்பரப்பில் எவ்விதத் தடையுமின்றி மீன்பிடிக்க ஏதுவாக ஒரு புதிய வரைவு ஒப்பந்தக் குறிப்பு (Mou) *1994*-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தயாரிக்கப்பட்டது. இது தொடர்பாக மாநில மற்றும் மைய அரசு அதிகாரிகள் *1994*-ஆம் ஆண்டு மார்ச் மாதம் *7-10* இல் இலங்கைச் சென்று, இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். அவ்விவாதத்தின் போது, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது நிறுத்தப்படும் என இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். இருந்தபோதிலும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள். மேலும், மேற்படி விவாதத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. தற்போது இலங்கையில் புதிதாக தேர்ந்து எடுக்கப்பட்ட அரசு ஆட்சியில் உள்ளதால், மீண்டும் இரு நாட்டுப் பிரதிநிதிகளும் ஒப்பந்த குறிப்பு குறித்து கலந்து பேசுவதற்கு கூட்டம் ஒன்றினைக் கூட்டுமாறு *26-12-94*-ல் மைய அரசின் வெளிவிவகாரத்துறையைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து மைய அரசின் பதில் இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்று வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, மீனவர்கள் கடலில் செல்லும் போது காற்றில் திசை மாற்றத்தால் இலங்கைக்குச் சென்று விடுகிறார்கள் என்று விவர அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அதுபோன்று மீனவர்கள் யாரும் காற்றினுடைய மாற்றத்தால் அங்கே செல்வது இல்லை; செல்லமாட்டார்கள். அப்படிச் செல்வார்கள் என்றால், விசைப்படகு பழுதடைந்தால் மட்டும், அந்தத் திசையில் காற்று அடிக்கும்போது ஒருசிலர் சென்றிருக்கலாம். சமீபத்தில் *20* நாட்களுக்கு முன்பாக, என்னுடைய தொகுதியில் வேளாங்கன்னிக்கு

அருகில் சிறுகுடி என்ற கிராமத்தில் கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் கட்டுமரத்தில் சென்றார்கள் என்றால், அவர்கள் இலங்கைக்கு அருகிலும் செல்ல முடியாது, மையப் பகுதிக்கும் செல்ல முடியாது. ஏனென்றால், இவர்களிடம் விசைப்படகு கிடையாது. துடுப்பு மூலமாகச் செல்லுகின்ற கட்டுமரம் அங்கு செல்ல இயலாத நிலை இருந்தும், அவர்கள் மீன்பிடிக்கச் சென்று கொண்டிருந்தபோது மாலை சுமார் 4 மணிக்கு அவர்களுடைய கட்டுமரத்தைச் சுற்றி கண் இமைக்கும் நேரத்தில் 3 கடற்படைக் கப்பல்கள் சூழ்ந்து கொண்டன. உடனடியாக இவர்கள் பயந்துகொண்டு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வலையைக் கடலில் போட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோடிமாரி, உங்களுடைய பேச்சு கடலுக்குள்ளேயே சென்று கொண்டிருக்கிறது. கொஞ்சம் கரைக்கு வாருங்கள். *(சிரிப்பு)*

திரு. ஆர். கோடிமாரி: அவர்களுடைய வலையைப் போட்டுவிட்டு இராணுவ அதிகாரிகள் கையைத் தூக்கச் சொல்லியிருக்கிறார்கள். உடனே இவர்கள் கையைத் தூக்கி அவர்கள் காலில் மண்டியிட்டு கெஞ்சியிருக்கிறார்கள். அதையும் அவர்கள் பொருட்படுத்தாமல் கண்மூடித்தனமாகச் சுட்டு தள்ளியிருக்கிறார்கள். இராமசாமி தகப்பனார் பெயர் கோவிந்தசாமி என்ற 35 வயது மதிக்கத்தக்க மீனவர் அதே இடத்தில் இறந்திருக்கிறார். இன்னொரு மீனவர் கால் துண்டாகியிருக்கிறது. அவர் தஞ்சை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இன்னொருவருக்கு வலது கரத்தில் குண்டு பாய்ந்து, குண்டு வெளியேற்றப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் அவர்கள் கொடுமை தாங்காமல் அல்லல்படுகிறார்கள். இறந்த அந்த மீனவர் குடும்பத்திற்கும், காயம்பட்ட மீனவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நிலப்பரப்பிலே அந்த பார்டரை நாம் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் கடலிலே பார்டரை தெரிந்து கொள்வது என்பது மிகவும் சிரமமான காரியம். நம்முடைய எல்லையைத் தெரிந்து கொள்வது மிகவும் சிரமமான காரியம். நம்முடைய மீனவர்கள் தெரிந்து கொண்டு எல்லைக்கு அருகில் செல்வதில்லை. தெரிந்தோ தெரியாமலோ, மீன் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் எல்லையை

1996 பிப்ரவரி 15]

நெருங்கி விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்து வைத்திருக்கும்போதோ அல்லது தீவிரவாத கும்பல் பிடித்துவைத்திருக்கும்போதோ நம்முடைய அரசுக்குத் தகவல் கிடைத்தவுடன் நம்முடைய தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து நம்முடைய மீனவர்களை உடன் கொண்டுவந்து அவர்களுடைய வீட்டிற்குக் கொண்டுபோய் சேர்த்துவிடுகிறார்கள். சமீபத்திலேகூட கன்னியாகுமரி மாவட்டம், கோட்டைப்பட்டினம் அருகே, கடலிலே மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இலங்கையில் இருக்கின்றார்கள் என்ற தகவல் வந்த உடனேயே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அரசாங்க செலவிலே விமானத்தின் மூலமாக அவர்களைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து, அவர்களை வீட்டிலே சேர்த்தார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின்பேரிலே நான் அந்த மீனவர்களை 'ஏர் போர்ட்டு'க்குச் சென்று வரவேற்ற விஷயத்தினை செய்தித் தாள்களிலே நீங்கள் படித்திருக்க முடியும். அப்படி ஒரு மீனவன் காணாமல் போனால்கூட இந்த அரசு போர்க்கால அடிப்படையிலே எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. மீனவர்கள் இறக்கின்ற பட்சத்திலே உடனடியாக அவர்களுடைய குடும்பத்திற்கு உதவிட வேண்டுமென்ற வகையிலே மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம் என்ற வகையிலே மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் மத்தியிலே இருக்கின்ற 'பிஸ்கோபெஃட்' என்று சொல்லக்கூடிய 'பெடரேஷன்' மூலமாகத்தான் நாம் அந்த நிவாரண உதவியைப் பெற்று மீனவர்களுக்குத் தர வேண்டும். இதற்குக் குறைந்தது மூன்று மாதங்கள் ஆகின்ற காரணத்தினால், அந்த மூன்று மாதங்கள்கூட ஆகாமல், உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்; காத்து இருக்கக்கூடாது என்ற வகையிலே 'கார்ப்பஸ் ஃபண்டு' என்று சொல்லக்கூடிய ஒரு நிதியை ஏற்படுத்தி, அந்த 'கார்ப்பஸ் ஃபண்டு'க்கு 30 இலட்சம் ரூபாயை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மீனவர்கள் சுடப்பட்டு இறக்கும்போதோ அல்லது தொழில் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை மீனவர்களுக்கு உருவாகும்போதோ, அவர்களுக்கு உடனடியாக இந்த நிதியிலிருந்து எடுத்துக் கொடுக்கக் கூடிய வகையிலே இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு 30 இலட்சம் ரூபாயிலே அந்த நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நிதியிலிருந்துகூட இறந்த மீனவர் குடும்பத்திற்கும், காயம்பட்டு தொழில் செய்யமுடியாது இருக்கின்ற

அந்த மீனவர்களுக்கும், அவர்கள் ஏற்கெனவே நிதி பெறாமல் இருந்தால், அவர்களுக்கு நிதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்களுக்குத் தொடர்ந்து உயிர்ச் சேதம், உடமைச் சேதம் ஏற்பட்டு வருகிறது. இதைத் தடுப்பதற்கு தமிழக அரசின் சார்பிலே மீனவர் பாதுகாப்புப் படை என்ற அமைப்பை தனியாக அமைப்பதற்கு முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எந்தவித ஒரு அமைப்பில் இருக்கிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இந்திய நாடு என்ற அமைப்பிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தனியாக ஒரு படையை நாம் ஏற்படுத்த முடியாது. ஆனால் 1974-ஆம் ஆண்டு கச்சத் தீவு இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டது. அப்பொழுதிலிருந்து கச்சத் தீவை மீட்பதற்கோ, மீனவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கோ கடந்த காலங்களிலே நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால் நம்முடைய ஆற்றல்மிக்க தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் முதன்முறையாக நம்முடைய அரசினுடைய செயலாளர் அவர்களும், வெளியுறவுத் துறைச் செயலாளர் அவர்களும் இலங்கைக்குச் சென்று நம்முடைய மீனவர்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அந்தக் கொள்கையினை, அவர்களுடைய குரலை அங்கே வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 1974 மற்றும் 1976-ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தங்களை மீறும் வாய்ப்புளைத் தவிர்க்கக் கருதி இலங்கை நீர்ப்பரப்பில், இந்திய மீனவர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட மீன்பிடிப்பு அனுமதிக்கப்படுவது அவசியம் என்று கருதப்பட்டது. இதன்படி இலங்கை நீர்ப்பரப்பில் இந்திய மீனவர்களை அனுமதிக்கும் விதத்தில் 1994, பிப்ரவரி மாதத்தில் வரைவு ஒப்பந்தக் குறிப்பு தயாரிக்கப்பட்டு, இலங்கை அரசுடன் விவாதிக்கப்பட்டு 1994, மார்ச் மாதம் 7-ஆம் தேதி இந்தியத் தரப்பில் இருந்து இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகம், உள்துறை அமைச்சகம், பாதுகாப்புத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் துறை அரசுச் செயலாளர் ஆகியோரைக் கொண்ட குழு கொழும்பிற்குச் சென்று

1996 பிப்ரவரி 15]

வந்தது. இந்த தூதுக் குழு இலங்கையிலுள்ள இந்திய ஹை கமிஷனர் தலைமையிலேயும், இலங்கைத் தூதுக்குழு, இலங்கை வெளியுறவுத் துறைச் செயலாளர் தலைமையிலும் பாதுகாப்புத் துறைச் செயலாளர், மீன்துறை செயலாளர், கடல்படை தளபதி மற்றும் பிற அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இந்த விவாதத்தில் கலந்து கொண்டது. இப்பொருள் குறித்து இன்னும் இறுதியான முடிவு எடுக்கப்படவில்லை.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, திரு. கே. கந்தசாமி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எஸ்.ஆர். ஜெயராமன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

18--

சேலத்தில் ஓட்டல் தமிழ்நாடு கட்டுதல்

45613*--திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலத்தில் ஓட்டல் தமிழ்நாடு கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாநகரத்தில், இராமகிருஷ்ணா சாலையில் சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலா வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ்.ஆர். ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறை வளாகம் அமைப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். இன்று தமிழகத்திலே சேலம் மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்றார்கள். அங்கே மேட்டூர்டேம், தாரமங்கலம் கோயில், ஏற்காடு மலை போன்றவை இருப்பதினால் அங்கே தமிழ்நாடு ஹோட்டல் அமைப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்கின்றாரா என்று அறிய விரும்புகிறேன்.